## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையில் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 3 க்கு அமைவாக பொருண்மையான முன்னைய காலகட்டத்திற்கான தவறுகளை கண்டுபிடித்ததன் பின் வெளியிடுவதற்காக அனுமதிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் சென்ற காலத்திற்கமைவாக சீராக்கி | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை | இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய செயல்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பீட:டுப் பெறுமானங்களை ஸ்தாபித்து அத்தவறுகளின் சுபாவம் மற்றும் சீராக்கப்பட்ட விதம் பற்றி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும், சென்ற வருடம் தொடர்பாக மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருந்த ரூபா 8,012,320 க்கான தவறுகள் திருத்தப்படுவது பற்றி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வில்லை. அது போன்று சென்ற வருடம் நிதிக் கூற்றுத் தவறுகளை திருத்தப்பட்டு மீண்டும் ஸ்தாபித்து இருந்த போதும், அது பற்றி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | சபையினால் திறைசேரி வழங்கல் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக 2015 முதல் 2018 கால கட்டம் உட்பட மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி முதல் பொது தேய்மான சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அப்படியாயினும், அங்கு 2015 முதல் 2018 வரை காலம் தொடர்பாக செய்யப்பட்டிருந்த எமது பெறுமானத்தேய்வு சீராக்கல் ரூபா 5,043,761 குறைவாகவும் 2019 வருடம் தொடர்பாக எமது தேய்மானம் ரூபா 798,157 குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2015 வருடம் முதல் 2018 வரை எமது தேய்மானம் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் 2015 மற்றும் 2018 வருடங்கள் தொடர்பாக எமது தேய்மானம் ரூபா 5,043,761 மற்றும் 2019 வருடம் தொடர்பாக எமது தேய்மானம் ரூபா 798,157 உம் குறைவாக கணக்கிலிடப் பட்டிருப்பதை ஏற்பதுடன் 2020 வருடம் கணக்குகள் தயாரிக்கும் போது அதை திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | எமது தேய்மான சீராக்கல் முறையாக செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2004 தொடக்கம் வரை நாராகேன்பிட்டவில் அமைந்துள்ள பிரதான காரியாலய கட்டிடத்துக்காக கொழும்பு மாநகர சபைக்குச் செலுத்த வேண்டியுள்ள வரிப்பணம் ரூபா 2,384,989 பொறுப்புக்களுக்கான கணக்கில் சீராக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க வில்லை. | 2019 வருடம் இந்த வரிப் பணத்தினை செலுத்துவதற்கு எங்களுக்கு முதல் முறையாக அறியத் தரப்பட்டிருந்ததுடன் அதற்கு முன் நிலுவைப் பணம் சம்பந்தமாக நாங்கள் அறிந்திருக்கவில்லை என்பதனை அறியத் தருகின்றேன். 2019 வருடம் ஆகுகையில் | வரிப்பணம் சரியான முறையாக கணக்கிலிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நகர அபிவிருத்தி அதிகாரசபை இக்காணியினை சுவீகரித்துக் கொண்டதாக தெரிய வந்தது. இப்போதைக்கு இந்நிலையத்தினுள் வேறு நிலையங்களும் செயற்பட்டிருந்தமை யினால் அந் நிலையங்களுக்கும் வரிப்பணத்தினை பங்கிட்டு கொடுப்பதற்கு நடவடிக்கை படி அறிவிக்கப்பட்டது. 2020 வருடத்திற்கான வரிப் பணம் ஏற்கனவே செலுத்தப்பட்டு விட்டது. 2019 வருடத்திற்கான நிலுவை வரிப்பணம் இவ்வருட ஒதுக்கீடு கிடைத்ததும் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பேன் | |
| (ஈ) | நிரந்தர வைப்புக்கள் 2018 ஆம் வருடம் கிடைக்கப்பெற்ற ரூபா 331,907 க்கான வட்டி வருமானம் மீளாய்வாண்டில் முதலீட்டு வருமானமாக காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பாக பெற வேண்டிய முதலீட்டு வருமானம் ரூபா 774,855 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | 2019 வருட இலாபம் ரூபா 70.4 மில்லியன் ஆகும். அதன்படி ரூபா 331,907 க்கான பணம் இலாபப் படி அளவுக்கொத்ததாக இல்லாமையினால் 2019 வருட இலாபத்துடன் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிரந்தர வைப்பினை மீளப் பெறப்பட்டால் வங்கி சம்பந்தப்பட்ட காலத்திற்கான சாதாரண சேமிப்பு விகிதாசார வட்டியினை மட்டும் பெற்றுத் தரும். அதன்படி நூற்றுக்கு நான்கான சேமிப்பு வட்டிக்கு அமைவாக கணக்கிலிடப் பட்டுள்ளது. இறுக்கப்பட்ட வைப்புக்கு நிரந்தர வைப்புக்கான வட்டி வீதத்தினையே கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. | உண்மையான வருமானத்தினை கணக்கிலிடப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி 104 | மீளாய்வாண்டில் நாராஹேன்பிட்ட பிரதான காரியாலயத்தில் நேர்ந்த ரூபா 48,990 பெறுமதி வாய்ந்த கைத்தொலைபேசி காணாமற் போனமை, 2012 ஆம் வருடம் நாராஹேன்பிட்ட நாற்று மேடையில் நடந்த ரூபா 77,362 பண மோசடி மற்றும் 2018 ஆம் வருடம் அநுராதபுரம் உபுல்தெனிய களஞ்சியத்தில் நடந்த ரூபா 4,094,596 பெறுமதிவாய்ந்தது சோயா, அவரை கிலோ 37.223 காணாமற் போனமை தொடர்பாக விசாரணை செய்யப்படவில்லை. | கைத்தொலைபேசி தொலைந்து போனமைக்கான நஷ்டஈட்டு சம்பந்தமாக நி.பி 104 படி விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 2012 வருடம் நாராஹேன்பிட்ட நாற்று மேடையில் நடந்த ரூபா 77,364 க்கான பண மோசடி சம்பந்தப்பட்ட விசாரணை அறிக்கையினை பணிப்பாளர் குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பரிந்துரையினை செயற்படுத்துவதற்கான ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கொண்டு நடவடிக்கை இப்போதைக்கு நடந்து கொண்டிருக்கின்றது. 2018 வருடம் சோயா அவரைத் தொகை குறைந்தமை தொடர்பாக நி.பி 104 விசாரணை விவசாய அமைச்சுக்கான விசாரணை உத்தியோகத்தர்களால் மேற்கொண்டு செய்யப்பட்டு வருகின்றது. சோயா அவரை காணாமற் போனமையை தொடர்பாக நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணையினை பணிப்பாளர் சபையினால் இடையில் நிறுத்தப்பட்டு வேறொரு விசாரணை உத்தியோகத்தரிடம் கையளிக்கும் படி அறிவிக்கப்பட்டது. அதன்படி இவ் ஆரம்ப விசாரணை மீண்டும் விவசாய அமைச்சினூடாக வேறொரு விசாரணை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை நடாத்தப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் படி தாமதிக்கப்படாமல் விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | தாபனக் கோவை 11 ஆம் பந்தியின் 13.1.2 பிரிவு | பதில் நியமனத்துக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் சகல வகையிலும் தகுதியுள்ள உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டிய போதிலும், தகுதியற்ற மூன்றாந்தர உதவி திட்ட உத்தியோகத்தரை 2011 மே 02 ஆம் திகதி பதில் உதவி பணிப்பாளராக நியமித்து அதற்காக 15 மாதத்திற்காக ரூபா 96,950 பதில் கொடுப்பனவாக கொடுக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான பதில் நியமனத்திற்கு அவர் நியமிக்கப்படுவதற்கும் காரணம் 2011 ஆம் வருடம் உதவி பணிப்பாளர்(அபிவிருத்தி) பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தர் சேவையை விட்டு விலகி சென்றமையினால் ஏற்பட்ட வெற்றிடத்தினாலாகும். நிலையத்தின் அபிவிருத்தி பிரிவில் உத்தியோக தேவைக்கு அமைய நிலையத்தின் நியமன உத்தியோகத்தரினால் கொடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக ஆகும். அதற்கான பதில் சேவையாற்றும் கொடுப்பனவும் பெற்றுக் கொடுக்கப்பட்டள்ளதனையும் ஏற்றுக் கொள்கின்றேன். | சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.10(இ) பிரிவு | உடன்படிக்கை செய்து கொண்ட வழங்கல் பெறுமதியில் நூற்றுக்கு 10 க்கு குறையாத செயலாற்று காப்புறுதியொன்று பொருள் வழங்குநர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதும், ரூபா 1,506 மில்லியன் பெறுமதிவாய்ந்த சோளம் இறக்குமதி செய்த தனியார் கம்பினியிடமிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த ரூபா 150.6 மில்லியன் க்கு குறைவாக காப்புறுதிக்கு பதிலாக ரூபா 5 மில்லியன் மாத்திரமான காப்புறுதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அக் காரியத்திற்கேயான ரூபா 618.7 மில்லியன் பெறுமதியினைக் மற்றம் ரூபா 500.6 மில்லியன் பெறுமதியினைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த வேறு இரண்டு தனியார் கம்பனிகளிடமிருந்து எவ்வித காப்புறுதியும் | சோளக இறக்குமதி செயற்பாடு மற்றும் அதோடு ஏற்பட்ட ஊழல் செயற்பாட்டை பற்றிய விரிவான விசாரணையொன்றினை பெற்றுக் கொள்வதன் மூலம் விவசாய அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரினால் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட கணக்காய்வு விசாரணை அவதானிப்புக்களில் காட்டப்பட்டுள்ளபடி மற்றும் பொது கணக்காய்வு பிரிவினால் காட்டியுள்ளபடி சோளம் இறக்குமதியில் மோசடி நிகழ்ந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளபடியால் அதற்கான விசாரணை நடத்தும்படி தேசிய பெறுகை ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதில் பெற்றுக் கொள்ளப்படும் அறிக்கையின் படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளை மீறியமைக்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக் கொள்ளப்படாது ஒப்பந்தம் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அவ் வழங்குனர்களுக்கு பணம் கொடுக்கும் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக தலா ரூபா 05 மில்லியன் செயற்பாட்டு காப்புறுதியிலிருந்து குறைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 திருத்தப்பட்ட பிரிவு | ரூபா 2,690 மில்லியன் பெறுமதியான சோளக இறக்குமதிக்கான பெறுகை செயற்பாட்டிற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட பெறுகைக் குழுவின் அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டி இருந்த போதிலும், சபையினர் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவினால் அது அனுமதிக்கப்பட்டிருந்தது. அதில் குழு அங்கத்தினர் மூவருள் ஒருவர் பெறுகை தீர்மானத்திற்கு கைச்சாத்து இடப்பட்டிருக்கவில்லை. | சோளக இறக்குமதி செயற்பாட்டு தொடரினால் ஏற்பட்ட ஊழல் தொடரினை பற்றிய விபரமான விசாரணை ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டதன் பயனாக விவசாய அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரினால் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட கணக்காய்வு விசாரணை அவதானிப்புக்களில் காட்டப்பட்டுள்ளது போன்று மற்றும் அரச கணக்காய்வு பிரிவு மாற்றிக் காட்டியுள்ளது போல் சோளக இறக்குமதியில் மோசடி நிகழ்ந்துள்ள படியால் அதற்காக விசாரணை நடாத்துவதற்கு தேசிய பெறுகை ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதில் பெற்றுக் கொள்ளப்படும் அறிக்கையின்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளை மீறியமைக்கான --- உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவு ரூபா 70,409,680 க்கான மிகை இருந்ததுடன் அதற்கிணங்க சென்ற வருடம் ரூபா 41,940,044 க்கான மிகை இருந்தமையினால் சென்ற வருடத்திற்கு நேரொத்ததாக மீளாய்வாண்டு நிதிபெறுபேற்றில் ரூபா 28,469,636 க்கான வளர்ச்சி காட்டப்பட்டிருந்தது. சென்ற வருடத்திற்கு நேரொத்தமாக மீளாய்வாண்டில் திறைசேரி மற்றும் விவசாய அமைச்சிலிருந்து பெற்ற ஒதுக்கீடு ரூபா 20,952,420 யினால் கூடியமை, ஏனைய செயற்திட்ட வருமானங்கள் ரூபா 10,625,568 யினால் கூடியமை, வட்டி வருமானம் ரூபா 8,057,890 யினால் கூடியமை, நிரந்தர சொத்து, பராமரிப்பு மற்றும் திருத்த செலவுகள் ரூபா 524,412 னால் குறைந்துள்ள போதும், போக்குவரத்து, தொடர்பாடல், பாவனை

மற்றும் ஏனைய சேவைகளுக்கான செலவினங்கள் ரூபா 11,703,247 ஆக கூடியமை மேற்படி நிதிபெறுபெறு மீது பிரதான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறன் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 வருடங்களில் 1973 இலக்கம் 15 கொண்ட இலங்கை தேசிய பசி தீர்க்கும் திட்டசபை சட்ட மூலத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கம் அல்லாத குளங்களிலிருந்து மண் அகழ்வு செய்து அதிவேக பாதைகளுக்கு விற்பனை செய்யும் செயற்பாட்டினை செய்து இருக்கின்றது. மண் அகழ்வு செய்தமைக்காக ரூபா 3,370,595 பாதைகளுக்கு மண் விற்பதன் மூலம் ரூபா 81,134,631 வருமானத்தினை பெற்றுக் கொண்டிருந்தது. குளத்திட்ட அறிக்கையின்படி வழங்கப்பட்ட மண்ணுக்காக சம்பந்தப்பட்ட விவசாய இயக்கங்களிலிரந்து சபைக்கு பணம் பெற்றுக் கொள்ளப்பட்டு அப்பணத்தினை பொது ஒதுக்கீட்டுடன் சேர்த்து சிறிய குளங்களை உரிய தரத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியல் ஆலோசனையின் கீழ் அபிவிருத்தி செய்ய செய்யப்பட வேண்டியதாக காட்டப்பட்டுள்ள போதும், அப்படி செய்யப்படாது ரூபா 77,764,036 நிரந்தர வைப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சபையின் சட்ட மூலத்திற்கமைய செயல்பட வேண்டியமை மற்றும் சேர்க்கப்பட்ட பணம் சம்பந்தப்பட்ட காரியத்திற்கு ஈடுபடுத்த வேண்டியமை. |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சோளம் இறக்குமதி செய்யப்படும் போது அதன் நியமத்தினை சபையினால் பரீட்சிக்கப்பட்டு அனுமதிப்பதற்கு செயற்படாமையினால் ஒரு சோள இறக்குமதியாளரினால் உரிய கிரயங்களுக்கு ஒவ்வாத 13,000 மெட்றிக் தொன் அளவு இறக்குமதி செய்யப்பட்டு கால்நடை உணவு உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்து | சோளம் இறக்குமதி செயற்பாட்டு தொடரினால் ஏற்பட்ட ஊழல் தொடரினை பற்றிய விபரமான விசாரணை ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டதன் பயனாக விவசாய அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரினால் | விசாரணை செயற்பாடுகளை துரிதமாக முடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கப்பட்டிருந்தது. அதேவேளை இதன் மூலம் கால்நடை உணவுக்கு ஏற்படும் தாக்கம் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட கணக்காய்வு விசாரணை அவதானிப்புக்களில் காட்டப்பட்டிருந்தது போன்று மற்றும் அரச கணக்காய்வுப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது போல் சோளக இறக்குமதியில் மோசடி நிகழ்ந்துள்ள படியால் அதற்காக விசாரணை நடாத்தப்படுவதற்கு தேசிய பெறுகை ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதில் பெற்றுக் கொள்ளப்படும் அறிக்கையின் படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | சபையினால் பெற்றுத் தரப்பட்ட தகவல்களின்படி உள்ளூர் உற்பத்தி போதுமானதாக இல்லாமையினால் மீளாய்வாண்டில் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட சோளக அளவு 49,554 மெட்றிக் தொன் என காட்டப்பட்டுள்ள போதும் இவ் இறக்குமதி சம்பந்தமாக சுங்கம் மூலமாக பெற்றுக்கொண்ட தகவல்களின் படி இறக்குமதி செய்யப்பட்ட உண்மையான சோளம் அளவு மெட்றிக் தொன் 37,186 ஆகும். இதன்படி 12,368 மெட்றிக்தொன் வித்தியாசத்தினை உள்ளூர் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த தொகைகளிலிருந்து மீள் நிரம்பல் செய்யப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் சோளம் இறக்குமதி செய்த நிலையங்கள் தொகையினை ஒளித்து வைக்கப்படுவதன் மூலம் ஆகக்குறைந்த விலைமனு கீழாயினும் ரூபா 55 மில்லியன் | - மேற்படி - | - மேற்படி - |

அளவிலான தகாத இலாபம் பெறப்பட்டுள்ளதாக சந்தேகம் கணக்காய்வின் போது அப்புறப்படுத்த முடியாதிருந்தது. அப்படியாக இருந்த போதிலும், இச்செயற்பாடுகளுக்கு தலையீடு செய்வதற்கு சபைக்கு அமைச்சரவையினால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்த போதும், சபை இதுபற்றி தேடிப்பார்த்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முன் வந்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் மற்றும் நல்லாட்சி

### 4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் வருட திருத்தப்பட்ட செயற்பாட்டு திட்டத்தின் மூலம் 11 திட்டங்களுக்காக ரூபா 145 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதனுள் நூற்றுக்கு 45 பாவனை செய்யப்பட்டிருந்தது. இந்த 11 திட்டங்களுள் இதுவரை சபையினால் செயற்படுத்தப்பட்டு வந்த 03 திட்டங்கள் அதாவது பரிசோதனை செய்யப்பட்டு புது உற்பத்தியாக இனங்காணப்பட்ட சோயா சார்ந்த திட்டம் குறைந்த பாவனைக்கான பழரச பானம் உற்பத்தித் திட்டம் மற்றும் சபையின் விசேட உற்பத்தியான ‘‘சுவபோசர்’’ மற்றும் ‘‘மவ்போசா’’ உற்பத்தி மற்றும் தோசை மாவு உற்பத்தி செயற்பாடுகளை சபையினால் சந்தை வாய்ப்பினை உள்வாங்கப்பட்டு உற்பத்தி அளவினை மற்றும் வளங்களை உபயோகப்படுத்தி உற்பத்தி செய்து இலாபம் ஈட்டப்படாது தனியார் வியாபார கம்பனிகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட:டு உற்பத்தி, விநியோகம், மற்றும் மேம்படுத்தல் செயற்பாடுகளின் ஈடுபடுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. செயற்பாட்டு திட்டம் மூலமாக | செயற்பாட்டு திட்டத்தின் இலக்கினை அடையாமை. 2019 ஆம் வருட திருத்தப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டின் படி 11 திட்டங்கள் நிறைவேற்றிக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டன. ஆயினும், திட்டமிடப்பட்ட சில திட்டங்களை நிறைவேற்ற முடியாது போனமையினால் இலக்கினை அடைவதற்கு முடியாது போனமையினால் இலக்கினை அடைவதற்கு முடியாமற் போயிற்று. அது போன்றே செயற்படுத்தப்பட்ட சில திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தினை அடைவதற்கு முடியாமற் போனமையும் அதற்கு காரணமாக இருந்தது. மவ்போஷ’’ ‘‘சுவபோஷ’’ திட்டங்கள் இயந்திர சாதனங்கள் | செயற்பாட்டு திட்டத்திற்கு அமைய காரியங்களை உரிய முறையில் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தனமல்வில பண்ணையில் உளர் சாணம் மற்றும் தென்னம் (கழிவு) சோறு தலா மெட்றிக்தொன் 75 தயாரிப்பதற்கு ரூபா 3.95 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் அவ் உற்பத்திகள் செய்யப்படவில்லை. | பழுதடைந்தமையால் செய்ய முடியாது போயின. அது போன்றே உள்ளூர் அரிசி திட்டத்தில் கிடைத்த வருமானம் குறைதல், உள்ளூர் பான திட்டங்களின் (BFN) வருமானம் குறைதல், அரசி வலுவூட்டல் திட்டத்தின் ஒதுக்கீடு குறைவாதல், தெஹிவளை விற்பனை நிலையத்தின் வருமானம் குறைதல் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அது போன்றே நாராகேன்பிட்ட மரக்கன்று விற்பனை நிலையத்திற்கு முன்பான பாதையினை அகலமாக்குவதனால் விற்பனை நிலையத்தினை பிற்பகுதிக்கு கொண்டு செல்வதற்கு நேர்ந்தமையினால் நுகர்வோரின் அவதானம் குறைவதனால் வருமானம் குறைவடையவுள்ளது. இக்காரணிகளால் 2019 வருட வருமான இலக்கு குறைவடைந்துள்ளது. | |
| (ஆ) | செயற்பாட்டுத் திட்டத்திற்கமைவாக புத்தல பண்ணையில் கொம்போஸ்ட் உரம் மற்றும் பூச்சாடி கலவை மலா 300,000 கிலோ கிராம் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் கொம்போஸ்ட் உரம் 129,115 கிலோகிராமும் (நூற்றுக்கு 43) பூச்சாடிக் கலவை 119,000 கிலோ கிராம் (நூற்றுக்கு 40) மட்டும் தயாரிக்கப்பட்டிருந்தது. உர திட்டத்தின் தேறிய இலாபம் முன்னைய வருடத்திற்கு நேரொத்ததாக நூற்றுக்கு 48 ட்டாக குறைந்துள்ளது. | புத்தள தயாரிக்கப்படும் கொம்போஸ்ட் மற்றும் பூச்சாடிக் கலவை சபைக்கு சொந்தமான நாரஹேன்பிட்ட மற்றும் தெஹிவளை மரக்கன்று விற்பனை நிலையத்தில் விற்கப்படுகின்றன. ஆனால் 2019 மே மாதத்திற்கு பிறகு ‘‘கிரிமண்டல மாவத்தை’’ பாதையினை அகலமாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு நாராஹேன்பிட்ட | செயற்பாட்டு திட்டத்திற்கு அமைய காரியங்களை உரிய முறையில் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மரக்கன்று விற்பனை நிலையத்தின் விற்பனை செயற்பாடு ஸ்தம்பிதமாகி வருமானம் குறைந்தது. புத்தள பண்ணையின் அதிகளவு உற்பத்திப் பொருட்கள் நாராஹேன்பிட்ட விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படுகின்றது. மரக்கன்று விற்பனை நிலையத்துக்கு ஏற்பட்ட இந்த நிலையோடு புத்தள உற்பத்தி செயல்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கு நேர்ந்தது அப்படியிருந்தும் கொரோனா தொற்று காரணமாக காபனிக் உரத்திற்கான கேள்வி உயர் மட்டத்திற்கமைய திட்டமிடப்பட்ட அளவினையில் இப்போதைக்கு நூற்றுக்கு 40 அளவான உற்பத்தியினை செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | குறைப்பாவனை பழரச பான உற்பத்தித் திட்டத்தில் 2019 ஆம் வருடத்திற்காக பழரச பான போத்தல் 25,000 உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அதில் நூற்றுக்கு 12 மட்டும் உற்பத்தி செய்திருந்ததுடன் சோயா சார்ந்த உணவு உற்பத்தி திட்டத்திற்காக சென்ற அண்மித்த 03 வருடங்களினுள் ரூபா 2.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் இறுதி உற்பத்தியினை நுகர்வோருக்கு சபையினால் முன் வைக்கப்படவில்லை. | 2019 வருடத்திற்கான குறைபாவனை பழங்களை கொண்டு செய்யப்படும் பான போத்தல் 25,000 உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதும் இந்த குறை பாவனை பழ விளைச்சல் கிடைப்பது காலநிலைக்கேற்ற வாறாகையினால் பழங்களை தேடிக் கொள்வது கஷ்டமான காரியமாக இருந்ததனால் செயற்பாட்டு திட்டத்தில் எதிர்பார்த்த படி பழரச பான உற்பத்தி செய்ய முடியாமல் போயிற்று எதிர்காலத்தில் இத்திட்டத்தினை அரசு தனியார் ஒத்துழைப்பின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | செயற்பாட்டு திட்டத்திற்கு அமைய காரியங்களை உரிய முறையில் செய்யப்பட வேண்டும். |